பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 07 2024 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. யுனெஸ்கோ உலக பாரம்பரிய சின்னங்கள் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தை இந்தியாவில் நடத்துவது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. கனிம வளத்துறையில் சுயசார்பு நிலையை அடைவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி வலியுறுத்தியுள்ளார்.

3. கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தில் நிஃபா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக அம்மாநில சுகாதார அமைச்சர் திருமதி வீணா ஜார்ஜ் தெரிவித்துள்ளார்.

4. நாட்டின் மேற்கு, மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. போலந்தில் உள்ள வாட்சாவில் நடைபெற்று வரும் கோடைகால தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா, 2 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் -*

<<<<>>>>

யுனெஸ்கோ உலக பாரம்பரிய சின்னங்கள் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தை இந்தியாவில் நடத்துவது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற உள்ள உலக பாரம்பரிய சின்னங்கள் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்றிரவு 7 மணிக்கு தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் தமது கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், முதல் முறையாக இக்கூட்டம் இந்தியாவில் நடத்தப்பட உள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் உள்ள பாரம்பரிய சின்னங்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை பகிர்ந்துகொள்வதற்கான முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பாக இக்குழு உள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதம் 31ஆம் தேதி வரை நடைபெற உள்ள இக்கூட்டத்தின் பல்வேறு அமர்வுகளில் உலக பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில்

இடம்பெற்றுள்ள தலங்களைப் பாதுகாப்பது தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

இதில் 150 நாடுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் அதிகமான பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

நாட்டின் கலாச்சாரத்தைப் பறைசாற்றும் வகையில் பாரத் மண்டபத்தில் பல்வேறு கண்காட்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

கனிம வளத்துறையில் சுயசார்பு நிலையை அடைவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்று மத்திய நிலக்கரி சுரங்கத்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி அழைப்பு விடுத்துள்ளார்.

ஹைதராபாதில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், நிலக்கரித்துறையில் நாடு தன்னிறைவு பெற்றுள்ளதாக கூறினார்.

வரும் காலங்களில் கனிம வளத்துறையில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் வகுக்கப்படும் என்று அவர் கூறினார்.

சுரங்கம் உள்ளிட்ட அனைத்து துறைகளின் மேம்பாட்டிற்காக வெளிப்படையான முறையில் மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அடுத்த 3 ஆண்டுகளில் இந்தியா உலக அளவில் 3வது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

சுயசார்பு இந்தியாவிற்கான இலக்கை எட்டுவதில் சுரங்கத்துறை முக்கியப் பங்கு வகிக்கும் என்று அவர் கூறினார்.

அதிகரித்து வரும் கனிமவள தேவையை கருத்தில் கொண்டு அதன் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் புதிய மற்றும் ஆக்கப்பூர்வமான வழிமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

முக்கிய கனிம வளத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது மின்னணு ஏலத்தில் பங்கேற்க உள்ளவர்களுக்கு அதற்கான அனுமதிக் கடிதங்களை திரு. கிஷன் ரெட்டி வழங்கினார்.

<<<<>>>>

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரை ஒட்டி அனைத்துக் கட்சிக் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

நாடாளுமன்ற இரு அவைகளின் நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் 6 புதிய மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் 19 புள்ளி 5 லட்சம் உறுப்பினர்கள் சந்தாதாரர்களாக உள்ளனர் என்று மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த ஆண்டு மே மாதம் வரை 9 புள்ளி எட்டு ஐந்து லட்சம் புதிய உறுப்பினர்கள் இணைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை 10 புள்ளி ஒன்பது ஆறு சதவீதம் உயர்ந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் மேற்கொண்டு வரும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் அதிகரித்து வரும் வேலைவாய்ப்புகள் காரணமாக சந்தாதாரர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தில் நிஃபா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக அம்மாநில சுகாதார அமைச்சர் திருமதி வீணா ஜார்ஜ் தெரிவித்துள்ளார்.

அம்மாவட்டத்தைச் சேர்ந்த 14 வயது சிறுவனின் ரத்த மாதிரிகள் புனேயில் உள்ள தேசிய வைராலஜி நிறுவனத்தில் பரிசோதனை செய்ததில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நிஃபா வைரசை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தொற்று பரவல் தொடர்பான நிலைமைகளை எதிர்கொள்ளும் வகையில் மாநில அரசு தயார் நிலையில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனையடுத்து மலப்புரம் மாவட்டத்தில் கட்டுப்பாட்டு அறை ஒன்று தொடங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் மேற்கு, மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கொங்கன், கோவா, மகாராஷ்டிர மாநிலத்தின் மத்தியப் பகுதி, விதர்பா, சத்தீஸ்கட் மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

குஜராத் மாநிலத்தில் உள்ள போர்பந்தர், ஜூனாகத், தேவ்பூமி, துவாரகா, நவ்ஷரி மற்றும் வல்சாத் மாவட்டங்களின் இன்று கனமழைக்கான சிவப்பு நிற எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே போர்பந்தரில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா நேற்று ஆய்வு செய்தார்.

மும்பை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியதால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நேபாள பிரதமர் திரு. கே.பி. ஷர்மா ஒலி, தனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான நம்பிக்கை வாக்கெடுப்பு அந்நாட்டு நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறுகிறது.

நேபாள நாட்டின் அரசியலமைப்புச் சட்டப்படி புதிதாக பொறுப்பேற்றுக்கொண்டுள்ள பிரதமர் 30 நாட்களுக்குள் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்ற விதி உள்ளது.

275 உறுப்பினர்களைக் கொண்ட அந்நாட்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு 138 வாக்குகள் தேவைப்படும் நிலையில் நேபாளி காங்கிரஸ் மற்றும் ஒருங்கிணைந்த மாக்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியை சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 166ஆக உள்ளது.

நேபாளி காங்கிரஸ் கட்சி ஆதரவுடன் ஜூலை 12ஆம் தேதியன்று திரு. கே.பி. ஷர்மா ஒலி பிரதமராக பொறுப்பேற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

நீட் வினாத்தாள் வெளியான விவகாரம் தொடர்பான வழக்கில் மேலும் 3 பேரை சிபிஐ கைது செய்துள்ளது.

இவர்களில் இருவர் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த மருத்துவ மாணவர்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

நாடு முழுவதும் இன்று குரு பூர்ணிமா கொண்டாடப்படுகிறது.

வியாசபூர்ணிமா என்று அறியப்படும் இந்த விழா அறிவுரைகள் மற்றம் கல்வியை போதித்து தங்கள் வாழ்வில் உயர வழிகாட்டிய ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது.

<<<<>>>>

வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் தமிழகம் தேசிய அளவில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

கடந்த நிதியாண்டில் நீடித்த வளர்ச்சிக்கான குறியீடுகள் பட்டியலை நிதி ஆயோக் அண்மையில் வெளியிட்டுள்ளது.

இதில் பருவநிலை மாற்றம் - சுற்றுச்சூழல் பராமரிப்பு, குறைந்த செலவில் மாசில்லா எரிசக்தி, தரமான கல்வி, சுகாதாரம், தொழில் வளர்ச்சி உள்ளிட்ட 13 இனங்களில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்காக காமராஜர் பெயரில் நவோதயா பள்ளிகளை நடத்த மத்திய அரசு தயாராக உள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், காமராஜர் ஆட்சிக் காலத்தில் கல்வி, தொழில்துறை மற்றும் விவசாயம் என அனைத்து துறைகளும் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றிருந்ததாக கூறினார்.

காமராஜரின் கனவுத் திட்டமான இல்லம்தோறும் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்தை மத்திய அரசு ஜல்ஜீவன் திட்டமாக நிறைவேற்றி வருவதை திரு. அண்ணாமலை சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

போலந்தில் உள்ள வாட்சாவில் நடைபெற்று வரும் கோடைகால தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா, 2 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.

மகளிர் 200 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் கிரன் பாகல் தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 400 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் ராஜேஷ் ரமேஷ் தங்கப்பதக்கம் வென்றார்.

<<<<>>>>

ஆசிய மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

இலங்கையில் நடைபெறும் இப்போட்டி இந்திய நேரப்படி இன்று பிற்பகல் 2 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஸ்விஸ் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் யூகி பாம்ரி - ஃபிரான்சின் **Albeno Oliveti** இணை, பிரான்சின் மார்ட்டின் - ஹம்பர்ட் இணையை இன்று எதிர்கொள்கிறது.

<<<<>>>>

தாய்லாந்தின் **Sriracha**-வில் நடைபெற்று வரும் 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா, 5 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

<<<<>>>>

நியூசிலாந்தில் நடைபெற்ற உலக பாடகர் குழுப் போட்டியில் இந்தியா 2 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

**<<<<The End>>>>**